THE HINDU - ENGLISH
Dated: 13.11.2024

# Central observers should uphold fair play during polls: CEC

**The Hindu Bureau**
NEW DELHI

Chief Election Commissioner Rajiv Kumar on Tuesday directed Central observers deployed for the Maharashtra Assembly election to uphold fair play, respond promptly to candidates' concerns and maintain professional conduct.

The Assembly polls are scheduled to be held in Maharashtra on November 20 and counting will be held on November 23.

A total of 142 general observers, 41 police observers and 72 expenditure observers are deployed in the 288 Assembly constituencies in Maharashtra.

**'No favouritism'**

At a review meeting held with the observers, Mr. Kumar asked them to be accessible to all candidates and parties without any favouritism. "Any complaints in this regard shall be viewed seriously," he told them, according to Election Commission sources.

The CEC further asked them to maintain strict vigilance over the law and order situation and flow of any inducements such as drugs, liquor, freebies, and cash that can be used to vitiate the electoral space.



Rajiv Kumar

Checking and screening by enforcement agencies shall be done by established protocol and in a completely impartial manner maintaining a level-playing field and observers should see that Central forces and State police forces are maintaining neutrality and their deployment is not favouring any political parties or candidates.

Observers may particularly ensure that the whole election process, specifically the campaign discourse, do not in any manner affect the dignity of women, Mr. Kumar said.

He further said that during polling hours, observers should visit as many polling stations as possible and make an assessment of the situation inside the polling stations regularly and ensure that polling is going on in a free and fair manner.

THE HINDU - ENGLISH
Dated: 13.11.2024

# Big names face the test as Jharkhand votes in Phase I

## People's mandate

Apart from the 43 Assembly seats going to polls today in Jharkhand, bypolls are to be held in 31 Assembly seats and one Lok Sabha constituency – Wayanad. This does not include two seats in Sikkim, where the Sikkim Krantikari Morcha won uncontested

| State | Type | Seats |
|---|---|---|
| Jharkhand | Assembly | 43 |
| Assam | Assembly | 5 |
| Bihar | Assembly | 4 |
| Chhattisgarh | Assembly | 1 |
| Gujarat | Assembly | 1 |
| Karnataka | Assembly | 3 |
| Kerala | Assembly | 1 |
| | Parliament | 1 |
| Madhya Pradesh | Assembly | 2 |
| Meghalaya | Assembly | 1 |



**Democratic duty:** Officials carrying election materials leave for duty in Jharkhand on Tuesday. ANI

| State | Type | Seats |
|---|---|---|
| Rajasthan | Assembly | 7 |
| West Bengal | Assembly | 6 |
| Sikkim* | Assembly | 2 |

* Won uncontested | SOURCE: ECI

**The Hindu Bureau**
NEW DELHI/PATNA

As many as 43 of the 81 Assembly constituencies in Jharkhand will go to the polls on Wednesday, along with 31 Assembly constituencies scattered across the country where byelections are being held.

The polling for the high-profile Wayanad Lok Sabha constituency in Kerala – where Congress general secretary Priyanka Gandhi Vadra is making her electoral debut – will also be conducted on Wednesday.

In the first phase of the Jharkhand election, former Chief Minister Champai Soren, standing as a BJP candidate for the first time in Seraikella, is a key contestant.

Jamshedpur East will see Congress's Ajoy Kumar, a former Superintendent of Police, face off against the BJP's Purnima Das Sahu, daughter-in-law of former Jharkhand Chief Minister and current Odisha Governor Raghubar Das. Six State Cabinet Ministers are among the 683 candidates whose fate will be sealed when as many as 1.37 crore voters cast their ballots in this first phase of the Jharkhand election.

Of these, 36 candidates are from the BJP, while the Jharkhand Mukti Morcha is contesting in 23 seats, and the Congress has fielded 17 candidates.

CONTINUED ON
» PAGE 12

**High-profile bypoll**

In Kerala, the Lok Sabha bypoll in Wayanad was necessitated after Leader of the Opposition Rahul Gandhi vacated the seat following his victory from Raebareli in the recent general election. His sister Ms. Vadra is facing voters for the first time in her political career as the Congress candidate and is pitted against the BJP's Navya Haridas, and Sathyan Mokeri of the Communist Party of India.

The 31 Assembly constituencies where bypolls are being held are spread across 10 States, including seven seats in Rajasthan, six in West Bengal, five in Assam, four in Bihar, three in Karnataka, two in Madhya Pradesh, and one each in Chhattisgarh, Gujarat, Kerala, and Meghalaya. In another two seats in Sikkim, candidates from the ruling Sikkim Krantikari Morcha (SKM) won uncontested.

Most of these seats fell vacant after their sitting MLAs contested and won Lok Sabha seats earlier this year.

DECCAN CHRONICLE

Dated: 13.11.2024

## Priyanka to make electoral debut in Wayanad LS bypoll

# Byelections in 31 Assembly seats across 10 states today

**Jaipur/Kolkata, Nov. 12:** Bypolls will be held on Wednesday in 31 Assembly seats spread across 10 states and Kerala's Wayanad Lok Sabha constituency, from where Congress general secretary Priyanka Gandhi Vadra is making her electoral debut.

Though these byelections are not going to have any bearing on the governments, they are seen as a big test for the Congress and the INDIA bloc, which failed to put up a united show in the recent Haryana Assembly polls.

Most of these seats fell vacant after the sitting MLAs contested the Lok Sabha elections and won while in some constituencies, the bypolls are being held due to death of the representatives.



Uttarakhand chief minister Pushkar Singh Dhami at the Scheduled Caste conference organised ahead of the Kedarnath byelection in Rudraprayag on Tuesday. — *PTI*

The Wayanad seat was vacated by Rahul Gandhi, who also won from the Rae Bareli parliamentary constituency, which he kept.

Voting will be held in seven seats in Rajasthan, six in West Bengal, five in Assam, four seats in Bihar, three in Karnataka, two seats in Madhya Pradesh, and one seat each in Chhattisgarh, Gujarat, Kerala and Meghalaya. Votes will be counted on November 23.

Though polling was also scheduled for two seats in Sikkim — Soreng-Chakung and Namchi-Singhithang, Sikkim Krantikari Morcha (SKM) nominees Aditya Golay and Satish Chandra Rai have already been declared unopposed after their rivals withdrew from the race.

Ms Vadra, pitted against LDF's Sathyan Mokeri, NDA's Navya Haridas and 13 others in Wayanad, faces a key test — not only to hold onto the party's stronghold but also to widen the victory margin her brother, Rahul Gandhi, achieved in the last two elections. — *PTI*

TIMES OF INDIA Dated: 13.11.2024

# Uddhav's bags checked again, UBT alleges 'selective frisking'

## EC: Others Too Went Through Same Checks

Prasad.Joshi@timesofindia.com





PRE-POLL SHENANIGANS: Screengrabs from the video released by Shiv Sena (UBT) on Tuesday

**Chhatrapati Sambhajinagar:** A team of election officials, for the second time in three days, checked the bags of former chief minister of Maharashtra and Shiv Sena (UBT) chief Uddhav Thackeray after his helicopter landed at Kasar Shirsi village in Latur district on Tuesday afternoon. Like the previous day, Thackeray on Tuesday

BATTLEGROUND MAHARASHTRA

posted a video about it.

Asking the employees "not to be shy" in checking his luggage, Uddhav first told the election officials to show their identity cards and appointment letters. He also told them to make it clear if they had money in their wallets.

Thackeray on Monday expressed outrage after his bags were checked by officials deployed by the Election Commission (EC) at Wani, Yavatmal, ahead of a poll rally on Saturday. He questioned if such checks were conducted on PM Modi, Union home minister Amit Shah, Maharashtra CM Eknath Shinde or his deputies, Devendra Fadnavis and Ajit Pawar.

Senior officials from the Latur district administration said EC guidelines were followed while checking Thackeray's bags.

When asked by Thackeray how many such frisking operations they have done on Tuesday, one EC staff member was heard saying the Sena (UBT) chief was the "first one". Thackeray then said, "Why am I always the first customer?"

Referring to PM Modi's visit to Maharashtra during the day, he said, "Modi is coming today (Tuesday) and I would like to see you go to the Solapur airport, which is shut (in view of the PM's visit). Narendra Modi should also be subjected to this kind of checking. ... In Odisha, one official was suspended for checking Modi."

Thackeray later said, "I am not angry with you, but the same law should be applied to Narendra Modi when he is coming for the election campaign."

Though Thackeray said he was not angry with the poll staff for checking his luggage, he said he was unhappy about "one-sided justice".

### EC denies 'selective' frisking, says bags checked as per SoP

**New Delhi:** Responding to allegations by Shiv Sena (UBT) of "selective" frisking after election authorities checked the bags of its chief Uddhav Thackeray, Election Commission sources stated that a strict standard operating procedure (SoP) is followed to ensure a level-playing field.

When asked about the incident, an EC official said, "Aircraft and helicopters of top leaders across political parties are checked as per the laid down SoPs and without any relaxation." He cited that during the 2024 Lok Sabha elections, a similar issue was raised in Bihar. The helicopter in which BJP chief J P Nadda was travelling was checked in Bhagalpur on April 24. Also, the one in which home minister Amit Shah was travelling was checked in Katihar on April 21.

Meanwhile, while chairing a review meeting of central observers deployed in Maharashtra, CEC Rajiv Kumar told officials that screening by enforcement agencies should be done as per established protocol and in a completely impartial manner maintaining level playing field. TNN

# On J'khand poll eve, Cong releases manifesto

ASRP.Mukesh
@timesofindia.com

**Ranchi:** Congress came under Election Commission's scrutiny in Jharkhand on Tuesday by waiting until the eve of the first phase of voting in 43 assembly constituencies to unveil its manifesto, constituting what could be a rare breach of the pre-poll 'si-

BATTLEGROUND JHARKHAND

lence period' by any political party.

Chief electoral officer K Ravi Kumar said he would institute an inquiry, specifying that it was illegal for a party to release a manifesto between the end of campaigning for an election and voting day. Congress's ally JMM declared its manifesto on Monday, stretching it until hours before the start of the campaign curfew. 'Bharose ki Ghosna Patra', headlined with 24 commitments and running into several pages, is an iteration of the JMM and Congress-led INDIA bloc's joint manifesto released over a week ago—including an additional 50 units of free power, a caste-based census, and recruitment to all vacant posts in govt departments within a year of assuming office. "Congress will also conduct social audit every six months, if voted to office," Manifesto committee chairperson Bandhu Tirkey said.



'SILENCE PERIOD': Tribals give a traditional welcome to a security official before he leaves for polling duty in Ranchi on Tuesday

### Soren govt releases 4th aid instalment

Jharkhand CM Hemant Soren announced on Tuesday disbursements of the fourth instalment of Maiyan Samman Yojana, a day before the first of the two-phase assembly elections, reports **ASRP Mukesh.** The Hemant-led JMM-Congress-RJD govt has highlighted the four-month-old scheme under which women between 18 and 50 with no independent sources of income are paid ₹1000 every month. Hemant and his allies have pledged to increase the amount to ₹2,500 from Dec if voted back to office. The CM noted that 5.3 million women were enrolled in the Maiyan scheme.

THE HINDU- TAMIL
Dated: 13.11.2024

# தலைமை தேர்தல் அதிகாரியாக அர்ச்சனா பட்நாயக் பொறுப்பேற்பு

● சென்னை

தமிழக புதிய தலைமை தேர்தல் அதிகாரியாக அர்ச்சனா பட்நாயக் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக இருந்த சத்ய பிரத சாஹு சமீபத்தில் மாற்றப்பட்டார். அவருக்கு பதில், தமிழக அரசு அனுப்பிய பட்டியலில் இருந்து, அர்ச்சனா பட்நாயக்கை தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக இந்திய தேர்தல் ஆணையம் தேர்வு செய்து அறிவித்தது.

சத்யபிரத சாஹு, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், பால்வளத்துறை செயலராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரியாக அர்ச்சனா பட்நாயக் நேற்று அதிகாரப்பூர்வமாக பொறுப்பேற்றார். 2002-ம் ஆண்டு தமிழக பிரிவு ஐஏஎஸ் அதிகாரியான அர்ச்சனா பட்நாயக், ஒடிசாவை சேர்ந்தவர் என்பதுடன், தமிழகத்தின் முதல் பெண் தலைமை தேர்தல் அதிகாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

THE HINDU - TAMIL
Dated: 13.11.2024

# உத்தவ் தாக்கரே பைகள் சோதனை வழக்கமானது: தேர்தல் ஆணையம் தகவல்

● மும்பை

மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலை யொட்டி அரசியல் கட்சிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில் உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா கட்சியின் மூத்த தலைவர் சஞ்சய் ராவத் கூறுகையில், "தேர்தல் பிரச்சாரத்திற்கு செல்லும் உத்தவ் தாக்கரேவின் பைகள் கடந்த 2 நாட்களில் 2 முறை சோதனை செய்யப்பட்டுள்ளன. பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் அமித் ஷா, மகாராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே ஆகியோர் பிரச்சாரத்திற்கு செல்லும்போது அவர்களின் பைகள் இதுபோன்று சோதனை செய்யப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர்களை பாஜக குறிவைக்கிறது என்பதற்கு இது மற்றொரு உதாரணம்" என்றார்.

இப்புகார் குறித்து தேர்தல் ஆணைய வட்டாரங்கள் கூறுகையில், "யவத்மால் விமான நிலையத்தில் உத்தவ் தாக்கரேவின் பைகள் சோதனையிடப்பட்டன. இது வழக்கமான நடைமுறை. வழக்கத்தில் உள்ள நடைமுறைகளை அதிகாரிகள் பின்பற்றுகின்றனர்" என்று தெரிவித்தன.

THE HINDU - TAMIL
Dated: 13.11.2024

**43 தொகுதிகளில் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்கு பதிவு**

# ஜார்க்கண்டில் இன்று முதல்கட்ட தேர்தல்

**● 15,344 வாக்குச்சாவடிகளில் 1,152 வாக்குச்சாவடிகளை முழுமையாக பெண்களே நிர்வகிப்பர் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.**

● ராஞ்சி

ஜார்க்கண்ட் மாநில சட்டப் பேரவைக்கு முதல் கட்டமாக இன்று 43 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் மொத்தம் 81 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இங்கு ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (ஜேஎம்எம்), காங்கிரஸ் அடங்கிய இண்டியா கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. ஜேஎம்எம் கட்சித் தலைவர் ஹேமந்த் சோரன் முதல்வராக உள்ளார். இந்த சட்டப்பேரவையின் பதவிக்காலம் விரைவில் முடிவடைய உள்ளது.

இதைத் தொடர்ந்து, ஜார்க்கண்ட் சட்டப்பேரவைக்கு நவம்பர் 13, 20 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என்று தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதன்படி, முதல்கட்டமாக 43 தொகுதிகளுக்கு இன்று வாக்குப் பதிவு நடைபெற உள்ளது. இந்த 43 தொகுதிகளுக்கான தேர்தல் பிரச்சாரம் நேற்று முன்தினம் மாலையுடன் நிறைவடைந்தது.

இதைத் தொடர்ந்து 43 தொகுதிகளில் அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெறுவதற்கு தேவையான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்துள்ளது. இந்நிலையில் நேற்று காலை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு தேர்தல் அதிகாரிகள், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களுடன் புறப்பட்டுச் சென்றனர்.

43 தொகுதிகளில் மொத்தம் 685 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். பதற்றம் நிறைந்த வாக்குச்சாவடிகளில் கூடுதல் போலீஸார், ராணுவ வீரர்கள், துணை ராணுவ வீரர்கள் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். காலை 7 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை 5 மணி வரை தொடர்ந்து நடைபெறும். நவம்பர் 23-ம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

ஜார்க்கண்டில் மொத்தம் 2.6 கோடி வேட்பாளர்கள் உள்ளனர். இதில் ஆண் வாக்காளர்கள் 1.31 கோடி பேர், பெண் வாக்காளர்கள் 1.29 கோடி பேர். 11.84 லட்சம் வாக்காளர்கள் முதல்முறையாக வாக்களிக்க உள்ளனர்.

வாக்குப்பதிவுக்காக 15,344 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன. இவற்றில் 12,716 வாக்குச்சாவடிகள் கிராமப்பகுதியிலும், 2,628 வாக்குச்சாவடிகள் நகரப் பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ளன. 1,152 வாக்குச்சாவடிகளை முழுமையாக பெண்களேநிர்வகிப்பர் என்றுமாநில தேர்தல் அதிகாரி கே.ரவிக்குமார் அறிவித்துள்ளார்.

செராய்கெல்லா தொகுதியில், ஜேஎம்எம் கட்சியிலிருந்து பாஜகவுக்குத் தாவிய மூத்த தலைவர் சம்பாயி சோரன் போட்டியிடுகிறார்.

இண்டியா கூட்டணிக்கும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

**வயநாடு இடைத்தேர்தல்**


கடந்த மக்களவைத் தேர்தலில் ரே பரேலி, வயநாடு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்த காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்திதனதுவயநாடுதொகுதிஎம்.பி. பதவியை ராஜினாமா செய்து விட்டார். அவர் ரே பரேலி தொகுதியில் எம்.பி.யாக தொடர்கிறார்.

இதையடுத்து இங்கு இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தலில் காங்கிரஸ் சார்பில் அக்கட்சியின் தேசிய பொதுச் செயலர் பிரியங்கா காந்தி வதேரா போட்டியிடுவதால் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இங்கு காங்கிரஸ் சார்பில் பிரியங்காவும், கேரளாவை ஆளும் இடதுசாரி ஜனநாயக முன்னணி (எல்டிஎஃப்) சார்பில் சத்யன் மோக்கேரியும், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் நவ்யா ஹரிதாஸும் போட்டியிடுகின்றனர்.

கர்நாடகாவில் ஷிக்காவோன், சண்டூர், சென்னப்பட்டணா ஆகிய 3 பேரவைத் தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

சென்னப்பட்டணாவில் மதச்சார்பற்ற ஜனதா தளம் சார்பில், முன்னாள் முதல்வர் குமாரசாமியின் மகன் நிகில் குமாரசாமி போட்டியிடுகிறார்.



↑ ஜார்க்கண்ட் சட்டப்பேரவையில் உள்ள 43 தொகுதிகளுக்கு இன்று முதல் கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து தலைநகர் ராஞ்சியிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் தமது வாக்குச்சாவடிகளுக்கு நேற்று புறப்பட்ட தேர்தல் அதிகாரிகள். படம்: பிடிஐ

DAILY THANTHI
Dated: 13.11.2024



ஜார்கண்ட் மாநில சட்டசபை தேர்தலையொட்டி, வாக்குச்சாவடி பொருட்களை எடுத்துச்சென்ற தேர்தல் அலுவலருக்கு, பெண்கள் ஆரத்தி எடுத்து திலகமிட்டு வழியனுப்பி வைத்த காட்சி.

# ஜார்கண்ட் சட்டசபைக்கு முதல்கட்டமாக 43 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு

## வயநாடு நாடாளுமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல்

ராஞ்சி, நவ.13-

ஜார்கண்ட் மாநில சட்டசபை தேர்தலில் முதல் கட்டமாக 43 தொகுதிகளுக்கு இன்று (புதன்கிழமை) வாக்குப்பதிவு நடக்கிறது. இதேபோல் வயநாடு நாடாளுமன்ற தொகுதிக்கு இன்று இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

### ஜார்கண்ட் சட்டசபை தேர்தல்

ஜார்கண்ட் மாநிலத்தில் 81 இடங்களை கொண்ட சட்டசபைக்கு நவம்பர் 13 மற்றும் 20-ந்தேதி என இருகட்டங்களாக தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்தது.

முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 43 தொகுதிகளுக்கான தேர்தல் பிரசாரம் நேற்று முன்தினம் மாலையுடன் முடிவடைந்தது. இதைத் தொடர்ந்து வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் கமிஷன் தீவிரப்படுத்தியது.

### இன்று வாக்குப்பதிவு

முதல் கட்டமாக 43 சட்டசபை தொகுதிகளுக்கு இன்று (புதன்கிழமை) வாக்குப்பதிவு நடைபெறுகிறது. காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கும். மாலை 5 மணிக்கு முடிவடையும்.

முதல்கட்ட தேர்தல் நடைபெறும் 43 தொகுதிகளில் மொத்தம் 685 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இதில் அதிகபட்சமாக ஜாம்ஷெட்பூர் மேற்கு தொகுதியில் 28 வேட்பாளர்களும், குறைந்தபட்சமாக ஜகநாத்பூர் தொகுதியில் 8 வேட்பாளர்களும் போட்டியிடுகிறார்கள்.

வாக்குச்சாவடிகளுக்கு தேவையான அனைத்து பொருட்களும் நேற்று தேர்தல் அலுவலர்கள் எடுத்துச் சென்றுவிட்டனர். தேர்தல் பொருட்களை எடுத்துச் சென்ற தேர்தல் அலுவலர்களுக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து, திலகமிட்டு வழியனுப்பி வைத்தனர்.

தேர்தல் ஏற்பாடுகள் குறித்து தேர்தல் கமிஷனர் கே.ரவிக்குமார் கூறுகையில், 'வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளது. இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி வெளியாட்கள் யாரும் வாக்குச்சாவடிகளில் தங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். வாக்குச்சாவடிக்குள் செல்போன் எடுப்பது, போட்டோ எடுப்பது, வீடியோ எடுப்பது ஆகியவை சட்ட விரோதமானது. மீறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

### 1 கோடியே 37 லட்சம் வாக்காளர்கள்

முதல்கட்ட தேர்தலில் மொத்தம் 1 கோடியே 37 லட்சம் பேர் தகுதியுள்ள வாக்காளர்கள். இதில் 68 லட்சத்து 73 ஆயிரம் பேர் ஆண்கள். 68 லட்சத்து 36 ஆயிரம் பேர் பெண்கள். 303 பேர் மூன்றாம் பாலினத்தவர்.

வாக்குப்பதிவை அமைதியாக நடத்த பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பதற்றம் நிறைந்த பகுதிகளில் கூடுதல் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

### வயநாடு இடைத்தேர்தல்

இந்த தேர்தலுடன் கேரள மாநிலம் வயநாடு நாடாளுமன்ற தொகுதிக்கான இடைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவும் இன்று நடக்கிறது.

ராகுல் காந்தி ராஜினாமா செய்ததால் நடைபெறும் இந்த இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் பிரியங்காவும், இடதுசாரி கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு சார்பி சத்யன் மெகோரியும், பா.ஜனதா சார்பில் நவ்யா அரிதாஸ் ஆகியோரும் போட்டியிடுகிறார்கள்.

வயநாடு நாடாளுமன்ற தொகுதியில் 14 லட்சத்து 71 ஆயிரத்து 742 வாக்காளர்கள் உள்ளனர். இடைத்தேர்தலுக்காக 1,354 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளது. இதில் 13 வாக்குச்சாவடிகள் பதற்றமானது என்பதால், அங்கு தீவிர பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இதேபோல் மத்தியபிரதேச மாநிலம் விஜய்பூர், புத்தினி சட்டசபை தொகுதிகளுக்கும் இன்று இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

DINA MALAR
Dated: 13.11.2024

# ஜார்க்கண்டில் 43 தொகுதிகளில் இன்று முதற்கட்ட ஓட்டுப்பதிவு

ராஞ்சி, நவ. 13–

ஜார்க்கண்டில், 43 சட்ட சபை தொகுதிகளில் இன்று முதற்கட்ட தேர்தல் நடக்கிறது.

இங்கு, முதல்வர் ஹேமந்த் சோரன் தலைமையில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா – காங்., கூட்டணி ஆட்சி நடக்கிறது. மொத்தம் உள்ள 81 சட்டசபை தொகுதிகளுக்கு இரு கட்டங்களாக தேர்தல் நடக்கிறது.

இன்று, 43 தொகுதிகளுக்கு ஓட்டுப்பதிவு நடக்கவுள்ள நிலையில், மீதமுள்ள 38 தொகுதிகளில், வரும் 20ல் தேர்தல் நடக்கிறது; 23ல் ஓட்டு எண்ணிக்கை நடக்கிறது. இந்த தேர்தலில், ஆளும் கூட்டணிக்கும், பா.ஜ., கூட்டணிக்கும் இடையே பலத்த போட்டி நிலவுகிறது.

பா.ஜ., வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்ட நிலையில், காங்., மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து, அக்கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, லோக்சபா எதிர்க்கட்சி தலைவர் ராகுல் உள்ளிட்டோர் பிரசாரம் செய்தனர்.

இந்த தேர்தலில், 609 ஆண்கள், 73 பெண்கள், மூன்றாம் பாலினத்தவர் ஒருவர் என மொத்தம், 683 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.



ஜார்க்கண்ட் மாநிலத்தில் இன்று முதற்கட்ட தேர்தல் நடக்க உள்ளது. மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரத்தை எடுத்துச் சென்ற ஊழியருக்கு, பழங்குடியின பெண்கள் தங்களின் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர். இடம்: ராஞ்சி.

முதற்கட்ட தேர்தலில், செரைகெல்லா, ராஞ்சி, ஜாம்ஷெட்பூர் மேற்கு, ஜெகநாத்பூர், ஜாம்ஷெட்பூர் கிழக்கு ஆகியவை முக்கிய தொகுதிகள்.

செரைகெல்லா தொகுதியில், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவில் இருந்து விலகி, சில மாதங்களுக்கு முன், பா.ஜ.,வில் சேர்ந்த முன்னாள் முதல்வர் சம்பாய் சோரன் போட்டியிடுகிறார்.

ராஞ்சி தொகுதியில், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா சார்பில், ராஜ்ய சபா எம்.பி., மஹுவா மஜி, ஜாம்ஷெட்பூர் மேற்கில், காங்கிரசைச் சேர்ந்த மாநில சுகாதார அமைச்சர் பன்னா குப்தா போட்டியிடுகின்றனர்.

ஜாம்ஷெட்பூர் கிழக்கில், காங்., வேட்பாளர் அஜோய் குமார், பா.ஜ.,வின் பூர்ணிமா தாஸ் சாஹூவை எதிர்த்து களம் காண்கிறார். ஜெகநாத்பூர் தொகுதியில், முன்னாள் முதல்வர் மது கோடாவின் மனைவி கீதா கோடா, பா.ஜ., சார்பில் போட்டியிடுகிறார்.

இதேபோல், கேரள மாநிலம் வயநாடு லோக்சபா தொகுதியிலும் இன்று இடைத்தேர்தல் நடக்கிறது. இதில், காங்கிரஸ் சார்பில், அந்த கட்சியின் பொதுச்செயலர் பிரியங்கா போட்டியிடுகிறார்.

அவரை எதிர்த்து இடதுசாரி கூட்டணி சார்பில் சத்யன் மொகேரியும், பா.ஜ., சார்பில் நவ்யாவும் போட்டியிடுகின்றனர்.